# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2112/35 - 2019 පෙබරවාරි මස 28 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.02.28

*2112/35 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு**

*அறிவித்தல்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 43 (1) ஆம் உப உறுப்புரையின் கீழ் பாதுகாப்பு விடயப்பொறுப்பு அமைச்சராக எனக்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ள விடயங்கள், பணிகள் மற்றும் திணைக்களங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் 2019.02.21 ஆந் திகதியிலிருந்து பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளதென்பது அரசியலமைப்பின் 44 (5) ஆம் உப உறுப்புரையின் வண்ணம் என்னால் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*மைத்திரிபால சிறிசேன,*
*சனாதிபதி,*
*பாதுகாப்பு அமைச்சர்.*

*பாதுகாப்பு அமைச்சு,*
*கொழும்பு 03,*
*2019, பெப்புருவரி 21.*

**அட்டவணை**

***(1) பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்***

| *நிரல் I*<br>*கடமைகளும் பணிகளும்* | *நிரல் II*<br>*திணைக்களங்களும் நியதிச் சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நிரல் III*<br>*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
|---|---|---|
| *1. நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களுடன் தொடர்பு பட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத் திட்டங் களையும் வகுத்தமைத்தலும் செயற் படுத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்* | *1. சிவில் பாதுகாப்புத் திணைக்களம்*<br>*2. பாதுகாப்புச் சேவைகள் கட்டளை, பதவி நிலைக் கல்லூரி*<br>*3. ரணவிருசேவை அதிகாரசபை*<br>*4. பாதுகாப்புச் சேவைகள் பாடசாலை* | • *(2008 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க) பாதுகாப்புச் சேவைகள் ஆணை மற்றும் பதவிநிலைக் கல்லூரிச் சட்டம்*<br>• *(1985 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க) பயன்பாடுகள் மற்றும் குறை நிரப்புச் சட்டம்*<br>• *(1999 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க) ரணவிரு சேவை அதிகார சபைச் சட்டம்* |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
| --- | --- | --- |
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச் சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்கள்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 2. நாட்டின் உள்ளகப் பாதுகாப்பைப் பேணுவதற்காக உதவி புரிதல் | 5. தேசிய பயிலிளவல் சிறப்பணி | • வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின் கீழ் குறிப்பாகக் கொண்டு வரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |
| 3. வயது முதிர்ந்த போர்வீரர்கள், ஊனமுற்ற படைவீரர் தொடர்பான அலுவல்கள் | 6. ரக்னா ஆரக்சன லங்கா லிமிட்டட் | |
| 4. பாதுகாப்புச் சேவை ஆளணியினருக்காக உயர்கல்வியைப் பெற்றுக் கொடுத்தல் | | |
| 5. பாதுகாப்புச் சேவை ஆளணியினரின் பிள்ளைகளின் கல்வி தொடர்பான நடவடிக்கைகள் | | |
| 6. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்கான நடவடிக்கைகளும் | | |
| 7. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள எல்லா நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

03- 777

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.